ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2370 - 2024 පෙබරවාරි මස 02 වැනි සිකුරාදා - 2024.02.02
**2370 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | *218* |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | *221* |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2024, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

217 - B82537 - 5403 (2024/02)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரகடனம் செய்தல்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) உப பிரிவுடன் வாசிக்கப்பட்ட மேற்படி சட்டத்தின் 134(1) உப பிரிவின் நியாகம பிரதேச சபை செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் 2023 ஆண்டு ஒற்றோபர் மாதம் இருபத்து மூன்றாம் திகதிய தீர்மான இலக்கம் 2023/10/23/175 இன் கீழ் தீர்மானம் செய்யப்பட்ட பின்வரும் தீர்மானம் அதன் சட்டத்தின் 134(1) உப பிரிவின் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி காலி நிர்வாக மாவட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக செயற்படும் சங்தீபனீ நில்மினீ தம்முல்லகே ஆகிய என்னால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சங்தீபனீ நில்மினீ தம்முல்லகே,*
*உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,*
*பிரதி உள்ளூராட்சி ஆணையாளர் - காலி.*

*காலி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில்,*
*2023, திசெம்பர் 11.*

***தீர்மானம்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவுக்கு இணங்க, நியாகம பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி, நியாகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள 30 டி கரவ்வ கிராம அலுவலர் பிரிவு மற்றும் 30 ஈ கலுஆரச்சிகொடை கிராம அலுவலர் பிரிவு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் அடங்கிய பிரதேசம் முன்னேற்றமடைந்த பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்றும், அதற்காக காலி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுவதற்கு மேற் குறிப்பிட்ட பிரதேச சபை சட்டத்தின் 9(3) பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி தீர்மானம் செய்யப்பட்டன.*

*02-38*

---

***கண்டி மாநகர சபை***

*ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம்*

*மாடறுக்கும் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அதிகாரம்) இல 17(1) பந்தியின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி கண்டி மாநகர சபையின் ஆணையாளராகிய என்னால் 2024 ஆம் ஆண்டில் கண்டி மாநகர எல்லைக்குள் கீழ் காட்டப்பட்டுள்ள முதலாம் மற்றும் இரண்டாம் சாராம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் விசேட காரணங்களுக்காக அரசினாலும் என்னாலும் கட்டளையிடப்படுகின்ற வேறு திகதிகளிலும் இறைச்சிக்காக விலங்குகளை கொல்லுதல், இறைச்சி விற்பனை செய்தல், இறைச்சி விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்தல் மட்டுமன்றி இறைச்சி வகைகளை விற்பனை செய்யும் இடங்களை திறந்து வைத்திருத்தல் போன்றன முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதனை நான் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*இஷான் விஜேதிலக,*
*மாநகர ஆணையாளர்,*
*கண்டி மாநகர சபை,*

*கண்டி மா நகர சபை அலுவலகம்,*
*2024 சனவரி .*

**முதலாவது அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| சனவரி | 25 | வியாழக்கிழமை | - | துருத்து முழு நோன்மதி தினம் |
| பெப்புருவரி | 23 | வெள்ளிக்கிழமை | - | நவம் முழு நோன்மதி தினம் |
| மாச்சு | 24 | ஞாயிற்றுக்கிழமை | - | மெதின் முழு நோன்மதி தினம் |
| ஏப்பிறல் | 23 | செவ்வாய்க்கிழமை | - | பக் முழு நோன்மதி தினம் |
| மே | 23 | வியாழக்கிழமை | - | வெசாக் முழு நோன்மதி தினம் |
| மே | 24 | வெள்ளிக்கிழமை | - | வெசாக் முழு நோன்மதி தினத்திற்கு அடுத்த நாள் |
| யூன் | 21 | வெள்ளிக்கிழமை | - | பொசொன் முழு நோன்மதி தினம் |
| யூலை | 20 | சனிக்கிழமை | - | அதி எசல முழு நோன்மதி தினம் |
| ஓகத்து | 19 | திங்கட்கிழமை | - | நிகினி முழு நோன்மதி தினம் |
| செத்தெம்பர் | 17 | செவ்வாய்க்கிழமை | - | பினர முழு நோன்மதி தினம் |
| ஒற்றோபர் | 17 | வியாழக்கிழமை | - | வப் முழு நோன்மதி தினம் |
| நவெம்பர் | 15 | வெள்ளிக்கிழமை | - | இல் முழு நோன்மதி தினம் |
| திசெம்பர் | 14 | சனிக்கிழமை | - | உந்துவப் முழு நோன்மதி தினம் |

**இரண்டாவது அட்டவணை**

வருடத்தில் அனைத்து மாதத்தினதும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் கீழ் காட்டப்பட்டுள்ள பொது விடுமுறை தினங்களிலும் அதற்கு மேலதிகமாக விசேட காரணங்களுக்காக அரசினாலும் என்னாலும் கட்டளையிடப்படுகின்ற ஏனைய நாட்களிலும்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனவரி | 15 | திங்கட்கிழமை | - | தைப் பொங்கல் தினம் |
| பெப்புருவரி | 04 | ஞாயிற்றுக்கிழமை | - | தேசிய சுதந்திர தினம் |
| மாச்சு | 08 | சனிக்கிழமை | - | மஹா சிவராத்திரி தினம் |
| மாச்சு | 29 | வெள்ளிக்கிழமை | - | பெரிய வெள்ளி தினம் |
| ஏப்பிறல் | 11 | வியாழக்கிழமை | - | ஈதுல் பிதர் (ரமழான் நோன்பு தினம்) |
| ஏப்பிறல் | 12 | வெள்ளிக்கிழமை | - | சிங்கள, தமிழ் புத்தாண்டு தினத்திற்கு முன் தினம் |
| ஏப்பிறல் | 13 | சனிக்கிழமை | - | சிங்கள, தமிழ் புத்தாண்டு தினம் |
| மே | 01 | புதன்கிழமை | - | உலக தொழிலாளர் தினம் |
| யூன் | 17 | திங்கட்கிழமை | - | ஈதுல் அல்ஹா (ஹஜ் பெருநாள் தினம்) |
| செத்தெம்பர் | 16 | திங்கட்கிழமை | - | நபிகள் நாயகம் பிறந்த தினம் |
| ஒற்றோபர் | 04 | வெள்ளிக்கிழமை | - | உலக விலங்குகள் தினம் |
| ஒற்றோபர் | 31 | வியாழக்கிழமை | - | தீபாவளி பண்டிகை தினம் |
| திசெம்பர் | 25 | புதன்கிழமை | - | நத்தார் பண்டிகை தினம் |

02-58

---

**பேருவளை பிரதேச சபை**

பாதைகளுக்கு பெயர் சூட்டுதல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆவது பிரிவின் பிரகாரம் இந்தப் பிரதேச சபையின் பயாகல உப காரியாலய அதிகாரப் பிரிவுக்குச் சொந்தமான கீழே உப அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைக்கு “ரணவிரு லான்ஸ் கோப்ரல் எச்.டி.எஸ். சம்பத் பர்னாந்து மாவத்தை” என பெயர் சூட்டுவதற்காக பிரதேச சபையின் 2022.04.19 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தின் இலக்கம் E.1.59 கொண்ட பிரேரணைக்கு மேல் மாகாண கௌரவ ஆளுநரின்

அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளது என்பதால் அந்தப் பாதை 2023.11.08 ஆம் திகதி தொடக்கம் "ரணவிரு லான்ஸ் கோப்ரல் எச்.டி.எஸ்.சம்பத் பர்னாந்து மாவத்தை" என பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

அசோக ரணசிங்க
பிரதேச சபையின் செயலாளரும், பேருவளை
பிரதேச சபையின் அதிகாரங்களை, வேலைகளை
மற்றும் கடமைகள் நடைமுறைப்படுத்தும்
அதிகாரியும்.

பேருவளை பிரதேச சபை.
2024, சனவரி 22.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | - | பேருவளை பிரதேச சபை |
| 2. மாவட்டம் | - | களுத்துறை |
| 3. பிரதேச செயலாளர் பிரிவு | - | பேருவளை |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | - | மக்கொன மாகல்கந்த ரொக்லன்ட் சந்தியில் இருந்து மாகல்கந்த கிராமத்துக்கு உட்பிரவேசிக்கும் பாதை |
| 5. பாதையின் ஆரம்பம் | - | மக்கொன மாகல்கந்த ரொக்லன்ட் சந்தியில் இருந்து |
| 6. பாதையின் முடிவு | - | மாகல்கந்த கிராமத்துக்கு உட்பிரவேசிக்கும் பாதை |
| 7. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | - | " ரணவிரு லான்ஸ் கோப்ரல் எச்.டி.எஸ்.சம்பத் பர்னாந்து மாவத்தை " |

02-78

---

**இபலோகம பிரதேச சபை**

இபலோகம பிரதேச சபை அதிகார எல்லையில் வரிப்பணம் ஆதனங்கள் மீது புதிய மதிப்பீடுகளுக்காக

இபலோகம பிரதேச சபையில் அதிகாரங்களை செயற்படுத்தும் பணிவினை செயற்பாடுகளை நிறைவேற்றும் செயலாளராகிய டப். எம். டப். குமாரி விஜேசிங்க ஆகிய என்னால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 134(1) உப பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக இபலோகம பிரதேச சபை அதிகார எல்லையில் வரிப்பணம் ஆதனங்கள் மீது புதிய மதிப்பீடுகளுக்காக வடமத்திய மாகாண கௌரவ ஆளுநர் கட்டளை பிறப்பித்துள்ளார் என இத்தால் அறிவிக்கிறேன்.

டப். எம். டப். குமாரி விஜேசிங்க,
செயலாளர்,
அதிகாரங்களை செயற்படுத்தும்
பணிவினை செயற்பாடுகளை
நிறைவேற்றும் உத்தியோகத்தர்,
இபலோகம பிரதேச சபை.

02-36/1

---

**இபலோகம பிரதேச சபை**

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கட்டளை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) பிரிவினால் அதிகாரங்களை செயற்படுத்தும் பணிவினை செயற்பாடுகளை நிறைவேற்றும் இபலோகம பிரதேச சபையின் செயலாளரினால் புதிய மதிப்பீட்டினை மேற்கொள்ள 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 (1) பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கட்டளையினை பெற்றுக்கொள்ள வேண்டும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146(1) பிரிவின் பிரகாரம் இபலோகம அதிகார எல்லையில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தினுள் அமையப்பெற்றுள்ள ஆதனங்கள் மீது புதிய மதிப்பீட்டினை மேற்கொள்ள 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகான சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146(1) பிரிவினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக வடமத்திய மாகாண கௌரவ ஆளுநர் மஹிபால ஹேரத் ஆகிய என்னால் இபலோகம பிரதேச சபையில் வரிப்பணம் ஆதனங்கள் மீது புதிய மதிப்பீடுகளுக்காக கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது.*

மஹிபால ஹேரத்,
ஆளுநர்,
உள்ளூராட்சி மன்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்,
வடமத்திய மாகாணம்,
அநுராதபுரம்.

*12-36/2*

---

**இபலோகம பிரதேச சபை**

இபலோகம பிரதேச சபை அதிகார எல்லையில் வரிப்பணம் ஆதனங்கள் மீது வரிப்பணம் வரி சதவீதத்தினை அறிவித்தல்

இபலோகம பிரதேச சபையில் அதிகாரங்களை செயற்படுத்தும் பணிவினை செயற்பாடுகளை நிறைவேற்றும் செயலாளராகிய டப். எம். டப். குமாரி விஜேசிங்க ஆகிய என்னால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 134(1) உப பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக இபலோகம பிரதேச சபை அதிகார எல்லையில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தினுள் அமையப்பெற்றுள்ள ஆதனங்கள் மீது அதன் வருடாந்த பெறுமதியின் நூற்றுக்கு ஆறு (6%) வருடாந்த வரிப்பணம் வரியினை விதித்து அறவிட வடமத்திய மாகாண கௌரவ ஆளுநர் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது என இத்தால் அறிவிக்கிறேன்.

டப். எம். டப். குமாரி விஜேசிங்க,
செயலாளர்,
அதிகாரங்களை செயற்படுத்தும்
பணிவினை செயற்பாடுகளை நிறைவேற்றும் உத்தியோகத்தர்,
இபலோகம பிரதேச சபை.

*02-36/3*

---

# வரவு செலவுத் திரட்டுகள்

**பருத்தித்துறை நகர சபை**

வரவு செலவுத்திட்டம் - 2024

*2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட அறிக்கையானது 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அத்தியாயம் ) 178(1) ஆம் பிரிவின் பிரகாரம் பருத்தித்துறை நகர சபையினால் தயாரிக்கப்பட்டு 2023.12.18 ஆந் திகதிய 236/2023 ஆம் இலக்க நிர்வாக கட்டளைக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதனை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

| | | |
|---|---|---|
| மொத்தப் பெறுகை | - | ரூபா 153,074,125.00 |
| மொத்தச் செலவீனம் | - | ரூபா 153,069,555.00 |
| சபை நிதி சாதகம் | - | ரூபா 4,570.00 |

| நிகழ்ச்சித்திட்டம் | வருமானம் (ரூபா) | | | செலவினம் (ரூபா) | | |
|---|---|---|---|---|---|---|
| | மீண்டுவரும் வருமானம் | மூலதன வருமானம் | மொத்தம் | மீண்டுவரும் செலவினம் | மூலதனச் செலவினம் | மொத்தம் |
| 01. பொது நிர்வாகம் | 84,461,190.00 | 76,000.00 | 84,537,190.00 | 48,074,920.00 | 2,901,000.00 | 50,975,920.00 |
| 02. சுகாதார சேவைகள் | 30,473,695.00 | 1,000.00 | 30,474,695.00 | 50,763,695.00 | 1,117,000.00 | 51,880,695.00 |
| 03. பௌதீகத்திட்டமிடல் | 14,701,880.00 | 4,000.00 | 14,705,880.00 | 17,485,080.00 | 15,754,000.00 | 33,239,080.00 |
| 04. தண்ணீர்ச்சேவை | 473,000.00 | 1,000.00 | 474,000.00 | 251,000.00 | 1,000.00 | 252,000.00 |
| 05. பயனுறு சேவை | 19,881,600.00 | 1,000.00 | 19,882,600.00 | 3,092,600.00 | 311,000.00 | 3,403,600.00 |
| 06. நலன்புரிச்சேவை | 2,998,760.00 | 1,000.00 | 2,999,760.00 | 5,817,260.00 | 7,501,000.00 | 13,318,260.00 |
| **மொத்தம்** | **152,990,125.00** | **84,000.00** | **153,074,125.00** | **125,484,555.00** | **27,585,000.00** | **153,069,555.00** |

தாரணி கஜரூபன்,
செயலாளர்,
பருத்தித்துறை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கல்லூரி வீதி,
பருத்தித்துறை
2023, திசெம்பர் 18.

02- 37